பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 09 2025 FRIDAY 12.40 PM

ஆகாஷவாணி

**<u>தலைப்புச் செய்திகள்</u>**

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய புவி அறிவியல் விருதுகளை இன்று புதுதில்லியில் வழங்கினார்.
2. பீகார் மாநிலத்தில் 75 லட்சம் பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் அவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பை உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. இந்திய விமானப்படையில் 60 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக செயல்பட்டு வந்த MIG-21 ரக போர் விமானங்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இன்று படை விலக்கம் செய்துவைத்தார்.
4. இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையிலான தாராள வர்த்தக ஒப்பந்தம் விரைந்து நிறைவேற்றப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
5. Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isharani Baruah அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தேசிய புவி அறிவியல் விருதுகளை இன்று புதுதில்லியில் வழங்கினார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

அர்ப்பணிப்போடு ஆற்றிய கடமைக்காக இந்த விருதுகள் வழங்கப்படுவதாக தெரிவித்த குடியரசுத் தலைவர், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புவி அறிவியலில் சிறப்பான பங்களிப்பு ஆகியவற்றை செய்த அனைவருக்கும் தமது பாராட்டுகளை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>>>

பீகார் மாநிலத்தில் முதலமைச்சரின் மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 75 லட்சம் பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கிவைத்தார்.

பாட்னாவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், புதுதில்லியிலிருந்து காணொலி வாயிலாக கலந்துகொண்டு திட்டத்தை அவர் தொடங்கிவைத்தார்.

திட்ட பயனாளிகளிடம் காணொலி வாயிலாக உரையாடிய பிரதமர், பீகார் மாநிலத்தில் திரு நிதிஷ்குமார் தலைமையிலான அரசு தொடங்கியுள்ள இந்த திட்டம், பெண்களின் முன்னேற்றத்திற்கு பேராதரவாக இருக்கும் என்று தெரிவித்தார்.

பிரதமரின் வங்கிக்கணக்குகள் மூலம், இந்த தொகை மகளிருக்கு வழங்கப்படுவது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெண் தொழில் முனைவோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கில் வழங்கப்படும் அரசின் நிதியுதவி, அவர்களின் கனவுகளை நிறைவேற்றுவதற்கான புதிய வாய்ப்பை அளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசின் முத்ரா திட்டம், மகளிருக்கான ட்ரோன் DD திட்டம், மகளிர் காப்பீடு இயக்கம், உள்ளிட்டவை மகளிர் சுயவேலைவாய்ப்பை பெறுவதற்கான ஏராளமான வாய்ப்புகளை அளித்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளில் 30 கோடிக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டு, அரசு திட்டங்களின் பயன்களை மக்கள் காலதாமதமின்றி நேரடியாக பெற்று வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

*<<<<>>>>>>*

*இந்திய விமானப்படையில் 60 ஆண்டுகளுக்கு மேல் சிறப்பாக செயல்பட்டு வந்த MIG-21 ரக போர் விமானங்களை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று படை விலக்கம் செய்துவைத்தார்.*

*சண்டிகரில் இன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் விமானப்படை தலைமை தளபதி ஏர் சீப் மார்ஷல் ஏ பி சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.*

*1963-ஆம் ஆண்டு சீனாவுக்கு எதிரான போரின்போது, விமானப்படையில் அறிமுகம் செய்யப்பட்ட அதிவிரைவு ஜெட் விமானம் MIG-21 என்பது குறிப்பிடத்தக்கது.*

*1965 மற்றும் 1971-ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு எதிரான போரின்போதும் இந்த விமானங்கள் சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளன.*

*<<<<>>>>>>*

*இந்தியா – ஐரோப்பிய யூனியன் தாராள வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து நிறைவேற்றித் தருமாறு இத்தாலிய துணை பிரதமர் திரு Antionia Tajani கேட்டுக்கொண்டுள்ளார்.*

*நியூயார்க்கில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் ஆகியோரை சந்தித்து அவர் இந்த கோரிக்கையை வலியுறுத்தினார்.*

*இந்தியா – இத்தாலி இடையே நிலவிவரும் நீண்டகால பொருளாதார ஒத்துழைப்பு வலுவானது என்றும் அவர் தெரிவித்தார்.*

*மத்திய தரைக்கடல், மத்திய கிழக்கு, யுக்ரைன், இந்தோ பசிபிக் மண்டலங்களில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்து விவாதித்த பின் இந்த விஷயத்தில் விரைந்து முடிவெடுக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இத்தாலி துணை பிரதமரிடம் உறுதியளித்தார்.*

*<<<<>>>>>>*

*பேரிடர் பாதிப்பு இல்லாத பாதுகாப்பான இந்தியாவை கட்டமைக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் இன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் 21-ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் பேசிய அவர், புயல், கனமழை உள்ளிட்ட இயற்கை சீற்றங்கள் குறித்து முன்கூட்டியே அறிந்துகொள்வதற்கு வசதியாக நவீன கட்டமைப்புகளை இந்தியா உருவாக்கியுள்ளதாக கூறினார்.*

*புயல் எச்சரிக்கை குறித்த நவீன வானிலை முன்னறிவிப்பு ஆய்வுக்கருவிகள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதால், புயல் மழையால் ஏற்படும் உயிரிழப்பு முற்றிலுமாக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*தற்போது, துல்லியமாக வானிலையை அறிந்துகொள்வதற்கான கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.*

*புயல் மழையால் தற்போது உயிரிழப்புகள் இல்லை என்ற நிலை உருவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*பேரிடர் பாதிப்புகளை குறைப்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுள்ள திட்டங்கள் உலக அளவில் வரவேற்பை பெற்றுள்ளதாகவும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.*

*<<<<>>>>>>*

*பிரதமர் திரு நரேந்திர மோடியின் பிறந்தநாளையொட்டி, பிஜேபி சார்பில் நாடு முழுவதும் நலத்திடட உதவிகள் மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.*

*இதன் ஒருபகுதியாக தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் இன்று ரத்த தான முகாம் மற்றும் ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி ஆகியவை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.*

*(Sound Byte – மூர்த்தி - 30 Sec. )*

<<<<>>>>>>

*நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட விண்வெளி வீரர்களும், எதிர்காலத்தில் விண்வெளிக்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று ஆராய்ச்சி தெரிவிக்கிறது.*

*இதுதொடர்பான, ஆராய்ச்சியை வெளியிட்ட ஐக்கிய அரபு எமிரேட்டை சேர்ந்த சுகாதா நிறுவனம், நீரிழிவு நோயை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கான அனைத்து மருத்துவ கருவிகளும் விண்வெளியிலும் செயல்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது.*

*இதுதொடர்பாக, இந்திய விண்வெளி வீரர் திரு சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி மையத்திற்கு சென்றபோது ஆராய்ச்சி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

<<<<>>>>>>

*நிலக்கரி உற்பத்தி பொதுத்துறை நிறுவனங்களில் சிறப்பாக பணியாற்றிய ஒரு லட்சத்து 3 ஆயிரம் ஊழியர்களுக்கு நிலக்கரித்துறை அமைச்சகம் விருதுகளை அறிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு இந்த விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளது.*

*இவர்களுக்கான ஊக்கத்தொகை அவர்களின் செயல்திறன், வருகை ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த ஊக்கத்தொகை நிலக்கரித்துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு பண்டிகைகால சலுகையாக அமையும் என்றும் நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

<<<<>>>>>>

*ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை துருக்கி நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.*

*வாஷிங்டனில் தம்மை சந்தித்த துருக்கி அதிபர் திரு Erdogen -விடம் இதனை தெரிவித்த அவர், எண்ணெய் இறக்குமதி செய்வதன்மூலம், யுக்ரைன் மீதான போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக கூறினார்.*

*திரு எர்டோகன், ரஷ்யா மற்றும் யுக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்தி அமைதிக்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு டொனால்டு ட்ரம்ப் அப்போது கேட்டுக்கொண்டார்.*

<<<<>>>>>>

*ஐ நா பொதுச்செயலாளர் திரு அன்டோனியோ குட்ரசை இலங்கை அதிபர் திரு Anurakumara Dissanayake சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.*

*இலங்கையின் பொருளாதார சீர்திருத்தம், சமூக அரசியல் நடவடிக்கைகள் குறித்து இந்த ஆலோசனையின்போது விவாதிக்கப்பட்டது.*

*இலங்கையின் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஐ நா முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று திரு குட்ரஸ் உறுதியளித்துள்ளார்.*

*<<<<>>>>>>*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

*Kaohsiung மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Isharani Baruah அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-14, 21-18 என்ற செட் கணக்கில், சீன தை-பேயின் Yu Hsun Huang-ஐ வென்றார்.*

*----------------*

*ஆசிய கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர் நான்கு சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.*

*துபாயில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.*

*----------*

*சீன Smash டேபிள் டென்னிஸ் போட்டியின் முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Ankur Bhattacharjee வெற்றிபெற்றார்.*

*--------------*

*ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இளையோர் 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா சற்றுமுன்வரை 47 புள்ளி இரண்டு ஓவரில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 257 ரன் எடுத்துள்ளது.*

*பிரிஸ்பேனில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.*

*--------------*

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது.*

*<<<<<END>>>>>*